பி.வா.சா.1 ___ முனியப்பன் ஆஜர், குறுக்கு விசாரணை :-

தற்போது வழக்கு தாக்கல் செய்துள்ள சொத்தின் புல எண்.140/1ஜி புஞ்சை ஹெக்டர் 0.04.5 கொண்ட நிலமும் அதிலுள்ள கிணறும் என்றால் சரிதான். தாவா சொத்தும், இதர சொத்துக்களும் ஆதியில் அப்பாயி மற்றும் அவரின் பிள்ளைகளான துரைசாமி, கிருஷ்ணன் ஆகியோர்கள் மூதாதையர் மூலம் பாத்தியப்பட்ட பிதுராஜித சொத்துக்கள் என்றால் அப்பாயி (எ) முனியன் சம்பாதித்த சொத்துக்கள். மேற்படி சொத்துக்களை அப்பாயி, துரைசாமி, கிருஷ்ணன் ஆகியோர் 15.02.1980ம் தேதியில் பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை ஆவணம் மூலம் பிரித்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். கிணர் உட்பட 11 சென்ட் மட்டும் விட்டுவிட்டு மீதியை பிரித்துக்கொண்டார்கள். எனக்கு எழுதப்படிக்க தெரியுமா என்றால் தெரியும் 7ம் வகுப்பு வரை படித்துள்ளேன். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணம் 15.02.1980ம் தேதியில் ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் சான்றிட்ட நகல் என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தில் அப்பாயி, துரைசாமி, கிருஷ்ணன் ஆகியோர் 3 பிரிவுகளாக பிரித்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். ஏ-ஷெட்யூல் சொத்து அப்பாயிக்கும் பி-ஷெட்யூல் சொத்து துரைசாமிக்கும் சி-ஷெட்யூல் சொத்து கிருஷ்ணனுக்கும் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் புல எண்.140/1ல் உள்ள நிலத்தில் 15- ½ சென்ட் நிலமும், அதிலுள்ள கிணர் ஒன்றில் பொதுவில் பாதி பாகமும், துரைசாமிக்கும், அதேபோல் விஸ்தீரணமும் கிணற்றில் பாதி பாகமும் கிருஷ்ணனுக்கும் ஒதுக்கப்பட்டதாக காணப்படுகிறது என்றால் சரியல்ல. அப்பாயி குடும்பத்திற்கு எத்தனை கிணர் பாத்தியப்பட்டது என்றால் ஒரு கிணர்தான். அந்த கிணர் மற்றும் மண்திட்டு ஆகிய இடங்கள் பொதுவாகத்தான் உள்ளது என்றால் கூட்டாக உள்ளது. தற்போது வழக்கு தாக்கல் செய்துள்ள சொத்துதான் அது என்றால் சரிதான். என்னுடைய

தகப்பனார் பெயர் என்னவென்றால் துரைசாமி தற்போது இருக்கிறாரா என்றால் இறந்துவிட்டார். நான் தாக்கல் செய்துள்ள பதிலுரயில் 15.02.1980ம் தேதியிட்ட பாகப்பிரிவினை பத்தரத்தை மறுக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை ஆவணப்படி துரைசாமிக்கும், கிருஷ்ணனுக்கும் வழக்கு சொத்துக்களில் சரிபாதி பாகம் என்று சொன்னால் சரியல்ல. கிருஷ்ணனுக்கு எவ்வளவு பாகம் என்றால் 4ல் 1 பங்கு. மீதி 3 பங்கு யார் யாருடையது என்றால் துரைசாமி, முனியப்பன் மற்றும் ராஜா ஆகிய எங்கள் மூவருக்கும் ஆளுக்கொரு பங்கு. அதற்கான ஆவணங்கள் உள்ளதா என்றால் எங்கள் பெயரில் வழங்கிய பட்டா உள்ளது. என்னுடைய தகப்பனார் இறந்த பின்னிட்டு நாங்கள் கூட்டு பாத்தியஸ்தர்கள் என்ற முறையில்தான் பட்டாவை எங்கள் பெயரில் சேர்த்துள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. பட்டாவில் எங்கள் பெயர் உள்ளதாலேயே எங்களுக்கு ஆளுக்கொரு பங்கு உள்ளதாக கூறுவது பொய்யானது என்றும் அவ்வாறு எந்த உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. 15.02.1980ம் தேதியிட்ட பாகப்பிரிவினை ஆவணத்தின்படி என்னுடைய தகப்பனார் மூலமாகத்தான் எனக்கு உரிமை வருகிறது என்று சொன்னால் சரிதான். பாகப்பிரிவினை பத்திரத்தை என்னுடைய தகப்பனார் துரைசாமி, கிருஷ்ணனும் ஏற்றுக்கொண்ட அதை அமல்படுத்தி அதற்கேற்றவாறு அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். பகப்பிரிவினை ஆவணப்படி கிருஷ்ணனும், துரைசாமியும் கிணற்றையும் அதை சார்ந்த நிலத்தையும் சரிபாதி பங்காக அனுபவித்து வந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல நான்கு பேர் அனுபவித்து வந்தோம். என்னுடைய தகப்பனாரின் பங்கைதான் நாங்கள் அனுபவித்து வருகிறோம் என்று சொன்னால் சரியல்ல. கிருஷ்ணன் இருக்கிறாரா என்றால் இறந்துவிட்டார் அவருக்கு சகுந்தலா மட்டுமே ஒரே வாரிசு என்றால் சரிதான். 15.02.1980ம் தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரப்படி கிருஷ்ணனுக்கு ஒதுக்கப்பட்ட பாக

சொத்துக்களை அவர் அனுபவித்து வந்து அவர் இறப்பிற்கு பின்னிட்டு சகுந்தலா அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். துரைசாமி மக்களாகிய நாங்கள் சகுந்தலாவிடம் சேர்ந்து தாவா சொத்துக்களை கூட்டாக அனுபவித்து வந்தோம் என்றால் சரிதான். சகுந்தலா அனுபவித்து வந்த சொத்துக்களை பல்வேறு தேதிகளில் வாதிகளுக்கு கிரயம் செய்து கொடுத்து சுவாதீனம் ஒப்படைத்துவிட்டார் என்று சொன்னால் சரிதான். வாதிகள் கிரயம் பெற்ற பின்னிட்டு எங்களுடன் கூட்டாக சுவாதினத்தில் இருந்து வருகிறார் என்று சொன்னால் இல்லை. கிணர், மண்திட்டு ஆகியவை பொதுவாகத்தான் உள்ளது என்றால் சரியல்ல நான்காக பிரித்து கொடுக்கப்பட்டுவிட்டது. அது நான்காக எப்போது பிரிக்கப்பட்டது என்றால் 1986ம் ஆண்டு பிரிக்கப்பட்டது.

வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

ஒம்./-ஏ. செல்வகுமார்,பி.இ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி.